People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

06.06.2017

**சித்திரவதையால் பாதிப்புற்றோருக்கான அகில உலக ஆதரவு நாள் ஜுன் 26**

அன்புடையீர்,

அய்.நாவின் சித்திரவதையால் பாதிப்புற்றோருக்கான அகில உலக ஆதரவு நாள் ஜுன் 26 அன்று கடைபிடிக்கப்படுகிறது.

உலகெங்கிலும் சித்திரவதையால் பாதிப்புற்றோர்க்கு ஆதரவு தெரிவித்து ஆறுதல் அளித்து உளவியல் ரீதியாக தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் இந்நாள் அய்.நா.வால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அய்.நாவின் சித்திரவதைக்கெதிரான அகில உலக உடன்படிக்கையில் 1997-இல் கையெழுத்திட்ட இந்தியா, முப்பதாண்டுகள் ஆகியும் இன்று வரை ஏன் அதை நடைமுறைப்படுத்தவில்லை என்று கடந்த மே 4, 2017 அன்று ஜெனிவாவில் நடைபெற்ற உலகளாவிய காலமுறை மீளாய்வு (Universal Periodical Review) கூட்டத்தில் 41 நாடுகள் இந்தியாவிடம் கேள்வி கேட்டன. இதற்குப் பதிலளித்த இந்தியா தற்போது இதற்கான செயற்பாடுகள் சட்ட ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது என்று கூறியது.

உலகளாவிய காலமுறை மீளாய்வுக் கூட்டத்தில் இந்தியா மீது பிற நாடுகள் முன் வைத்த 250 கோரிக்கைகளில் ஒன்றைக்கூட இந்தியா உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே வருகிற செப்டம்பர் மாதம் நடக்க இருக்கும் அய்.நா.வின் 36வது கூட்டத் தொடரில் இவை எல்லாவற்றுக்கும் இந்தியா பதிலளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே செப்டம்பர் மாதக் கூட்டத்தில் சித்திரவதை சார்ந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் தேசிய அளவில் செயற்படும் அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் இத்துடன் மனித உரிமைத் தளத்தில் பெண்கள், குழந்தைகள், மதச் சிறுபான்மையினர், தலித், பழங்குடியினர், பாலினச் சிறுபான்மையினர், முதியோர் ஆகியோர் மத்தியில் பணியாற்றும் அனைத்து அரசு சாரா அமைப்புகளுக்கும் குடிமைச் சமூகத்திற்கும் மக்கள் கண்காணிப்பகம் கீழ்க்கண்ட கோரிக்கையை முன் வைக்கிறது.

- சித்திரவதைக்கெதிரான உள்நாட்டுச் சட்டம் விரைவில் இந்திய அரசால் நிறைவேற்றப்படவேண்டும்.
- அய்.நாவின் சித்திரவதைக்கெதிரான அகில உலக உடன்படிக்கையில் 1997 இல் கையெழுத்திட்ட இந்திய அரசு அதை உடனடியாக ஏற்புறுதி செய்யவேண்டும்.

- அய்.நாவின் சித்திரவதைக்கெதிரான சிறப்புப் பிரதிநிதி இந்தியா வருவதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

இக்கோரிக்கைகள் யாவும் இந்தியப் பிரமருக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மேலும் இதே அழுத்தத்தை தேசிய மனித உரிமை ஆணையம் பிரதமருக்குத் தெரிவிக்க வேண்டும். எனவே இது தொடர்பான வெவ்வேறு நிகழ்வுகளை அவரவர் அமைப்புகளின் பெயரிலோ அல்லது கூட்டாகவோ செயற்படுத்த வேண்டுமென்று மக்கள் கண்காணிப்பகம் அறைகூவல் விடுக்கிறது.

இந்த அறைகூவலை தமிழ்நாட்டில் செயற்படுத்துவதற்கான திட்டமிடல் கூட்டம் வருகிற 10.06.2017 அன்று காலை 10.00 மணிக்கு மக்கள் கண்காணிப்பகம் அலுவலகத்தில் நடைபெறஉள்ளது. இதில் கட்சி, இயக்கம், அமைப்பு போன்றவற்றில் மாநில அளவில் பொறுப்பில் உள்ள முடிவெடுக்கும் அதிகாரம் உள்ள பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு தோழமையுடன் அழைக்கிறோம்.

**(மதிய உணவுடன் கூட்டம் நிறைவு பெறும்)**

தோழமையுடன்,



(ஹென்றி திபேன்)
செயல் இயக்குநர்,
மக்கள் கண்காணிப்பகம்

**தொடர்புக்கு: இ. ஆசீர்வாதம் – தொலைபேசி எண்: 99943 68571**